### மக்களின் மிகப்பெரிய போக்குவரத்து அமைப்பாகத்திகழும்

# ரயில்வே துறையில் பணியாளர்களை குறைப்பதா?

## மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்,எச். ஜவாஹிருல்லா கண்டனம்!

சென்னை, ஏப். 27-

“மக்களின் மிகப்பெரிய போக்குவரத்து அமைப்பாகத் திகழும் ரயில்வே துறையில் பணியாளர்களைக் குறைப்பதா?” என்று மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா கண்டனம் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்திய மக்களின் மிகப்பெரிய போக்குவரத்து அமைப்பாகத் திகழ்வது ரயில்வேதுறை ஆகும். கோடிக்கணக்கான மக்கள் தினந்தோறும் பயணிக்கும் ரயில்வே ஏழை எளிய மக்களின் போக்குவரத்திற்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

தென்னக ரயில்வேவில் 95 ஆயிரத்து 322 பணியாளர்கள் பணிபுரிந்து வருவதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. தற்போது 1,906 பணியிடங்களைக் குறைப்பதற்கான முன்னேற்பாடுகளைத் தென்னக ரயில்வே செய்திருப்பதாகத் தகவல்கள் வருகின்றன.

அதே போன்று ரயில் பெட்டி தொழிற்சாலை (ஐசி எப்) நிறுவனத்தில் 217 இடங்கள் குறைக்க இருப்பதாகவும் தெரிய வருகிறது. வந்தே பாரத் அம்ரித் பாரத் என்றெல்லாம் புதிய ரயில்கள் ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கும் சூழ்நிலையில் இன்னும் கூடுதலாக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்கிற நிலையில் ஆட்குறைப்பு செய்வது பொது போக்குவரத்திற்கு மிகப்பெரிய அளவில் இடையூறு செய்வதாகும்.

ஏற்கனவே பணிபுரிந்து கொண்டிருக்கும் பணியாளர்களுக்கு பணிச்சுமையை அதிகரிப்பதோடு ரயில்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளில் மிகப் பெரிய தோய்வு உண்டாகும் நிலையும் உருவாகிறது.

ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை என்று தேர்தல் நேரத்தில் அறிவித்து விட்டு இருக்கின்ற வேலைகளைக் குறைக்கும் பணிகளை முன்னெடுப்பது ஒன்றிய பா.ஜ.க. அரசின் உண்மை முகத்தை இந்திய மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

தென்னக ரயில்வே ஆட்குறைப்பு வேலைகளைத் தவிர்த்து விட்டுக் கூடுதலாக பணியாளர்களை நியமிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு எம்.எச்.ஜவாஹிருல்லா தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### கும்பகோணம் வாணி விலாச சபாவின் சார்பில்

# ஞான பீட விருது பெற்ற கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு பாராட்டு விழா!

## சபா செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!

தஞ்சாவூர், ஏப்.26.

வரலாற்று சிறப்புமிக்க கும்பகோணம் வாணி விலாச சபாவின் சார்பில் இலக்கியத்திற்கான ஞான பீட விருது பெற்ற கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கு பாராட்டு விழா நடத்த உள்ளதாக சபாவின் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு. கல்யாணசுந்தரம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

கும்பகோணம் மாநகரில் 1914-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க வாணி விலாச சபா 112 ஆண்டுகளை கடந்து இயல், இசை, நாடக கலைகளை வளர்த்து வருகிறது. இச்சபாவில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உள்ளிட்ட பல தலைவர்கள் உரையாற்றி இருக்கின்றனர்.

வாணி விலாச சபா, தமிழ் கலைஞர்கள் சாதனை புரியும் போதெல்லாம், அவர்களை அழைத்து மரியாதை செலுத்தி பாராட்டு விழா நடத்தி வருகிறது. கடந்த ஆண்டு கவிப்பேரரசு வைரமுத்து 2025-ம் ஆண்டுக்கான இந்திய இலக்கியத்தின் உயரிய ஞானபீட விருது பெற்றார். நான்கு சகாப்த கால தமிழ் இலக்கியம், கவிதை மற்றும் திரைப்படப் பாடல் பங்களிப்பிற்காக இந்த விருது பெற்றுள்ளார். அகிலன் மற்றும் ஜெயகாந்தனுக்குப் பிறகு, 23 ஆண்டுகளுக்குப் பின் தமிழில் இந்த விருதைப் பெறும் மூன்றாவது நபர் கவிப்பேரரசு வைரமுத்து ஆவார்.

இலக்கியத்திற்கான உயரிய ஞானபீட விருதை பெற்ற பத்மபூசண் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களை பாராட்டும் வகையில் வரலாற்று புகழ் மிக்க எங்கள் வாணி விலாச சபா சார்பில் கவிஞர் வைரமுத்தவிற்கு பாராட்டு விழா நடத்த ஏற்பாடு செய்துள்ளோம். இவ்விழாவானது 30.04.2026 வியாழக்கிழமை மாலை 06.00 மணியளவில் வாணிவிலாச சபா கலையரங்கில் மிகச்சிறப்பாக நடைபெற உள்ளது. இதில் நற்றமிழ் நாயகர், தமிழ்நாடு அரசின் முன்னாள் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்கத்தின் இயக்குனர் மரு.ஜெய.ராஜமூர்த்தி பங்கேற்று கவிப்பேரரசு வைரமுத்து அவர்களைப் பாராட்டி சிறப்புரையாற்றுகிறார்.

விழாவில் பத்மபூஷன் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் பங்கேற்று ஏற்புரையாற்றுகிறார்.

எனவே இவ்விழாவில் சபா நிர்வாகிகள், சபா உறுப்பினர்கள், வணிகர் சங்கங்கள், இளைஞர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்துக் கொண்டு சிறப்பிக்க வாணிவிலாச சபாவின் தலைவர் மற்றும் நிர்வாக குழுவினர் சார்பில் அன்புடன் அழைக்கிறேன்.

இவ்வாறு வாணிவிலாச சபாவின் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# வாக்கு எண்ணிக்கை மைய கேமராவில் தவறான நேரம் காட்டுவதால் சர்ச்சை!

## திருப்பூரில் பரபரப்பு

திருப்பூர், ஏப்.27-

வாக்கு எண்ணிக்கை மையத்தில் வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள அறையில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராவில் தவறான நேரத்தை காட்டுவதால் சர்ச்சை எழுந்துள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் 17 லட்சத்து 56 ஆயிரத்து 109 பேர் வாக்களித்துள்ளனர். மாவட்டத்தில் 88.52 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன. மாவட்டத்தில் உள்ள 1983882 மொத்த வாக்காளர்களில் 227773 பேர் வாக்குகளை செலுத்தவில்லை, மாவட்டத்தில் 2822 ஓட்டு சாவடியில் வைக்கப்பட்டிருந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் ஓட்டு பதிவு முடிந்த பின்னர் முகவர்கள் முன்னிலையில் இயந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு பாதுகாப்பாக வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மையமான திருப்பூர் எல்ஆர்ஜி அரசினர் மகளிர் கல்லூரி வளாகத்தில் உள்ள ஸ்ட்ராங் ரூமில் அந்தந்த தொகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட அறையில் வைக்கப்பட்டு நான்கு அடுக்கு போலீஸ் பாதுகாப்புடன் உள்ளன.

இந்த வாக்கு எண்ணிக்கை மையத்தில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராவில் காலை 7 மணிக்கு பதிலாக காலை 5 மணி என தவறுதலாக நேரத்தை காட்டியது. இது குறித்து தேர்தல் பாதுகாப்பு பணிக்காக அனுமதியுடன் இருக்கக்கூடிய அரசியல் கட்சி ஏஜென்ட்கள் அதிகாரிகளிடம் கேட்டதற்கு சரியான விளக்கத்தை அவர்கள் தரவில்லை. இந்த குளறுபடிகள் திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதிக்கு மட்டுமல்ல மாவட்டத்தில் உள்ள எட்டு சட்டமன்ற தொகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவில் இதே போன்று தவறுதலான நேரத்தையே காட்டுவதால் இதில் ஏதோ குளறுபடிகள் இருப்பதாக குற்றச்சாட்டை அரசியல் கட்சியினர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வாக்கு எண்ணிக்கை மையத்தில் 200க்கும் அதிகமான சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வரும் நிலையில் அதிரடி படையினர், துணை ராணுவ படையினர், ஆயுத படையினர், மாநகர காவல் துறையினர் என 4 அடுக்கு பாதுகாப்புடன் வாக்கு எண்ணிக்கை மையம் உள்ளது. மூன்றாவது கண் என சொல்லப்படும் கண்காணிப்பு கேமராவில் சரியான நேரம் காட்டப்படாததால் அரசியல் கட்சியினர்கள் இதில் ஏற்பட்டுள்ள குளறுபடிகளை சரி செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுத்து வெளியிட்டுள்ள வீடியோ காட்சிகள் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், பெருமாள்பட்டு தனியார் கல்வி நிறுவன தொழிற்பயிற்சி கல்லூரி வளாகத்தில் சட்டமன்ற பொதுத் தேர்தல்2026 வாக்குப்பதிவு நிறைவடைந்து, வாக்கு எண்ணிக்கை மையத்தில் மூன்று அடுக்கு காவல் பாதுகாப்பு மற்றும் சி.சி.டி.வி. கண்காணிப்பில் இருப்பு அறையில் (Strong Room) சீல் செய்து வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் ஆய்வு மேற்கொண்டார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ் குமார், ஒன்றியச் செயலாளர் ஆர்.ஜெயசீலன்,மாவட்ட வழக்கறிஞர் அணிஅமைப்பாளர் பெ. வினோத் மாவட்ட பிரதிநிதி ஜெ.சுதாகர், மற்றும் திமுக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கழக வழக்கறிஞர்கள் உள்ளனர்




தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026க்கான வாக்கு எண்ணிக்கை 04.05.2026 அன்று நடைபெறவுள்ளதையொட்டி மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து தேர்தல் நடத்தும் அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் அ.அருண் தம்புராஜ் தலைமையில் நேற்று முன்தினம் (25.04.2026) சேலம் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உள்ளனர்.

# வாக்கு எண்ணும் மையப் பகுதிகளில் ட்ரோன் பறக்க தடை!

தஞ்சை, ஏப்.27-

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள வாக்கு எண்ணும் மையங்களின் பகுதிகளில் ட்ரோன்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள வாக்கு எண்ணும் மையங்களின் பகுதிகளில் ட்ரோன்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியரும், மாவட்டத் தேர்தல் நடத்தும் அலுவலருமான பா. பிரியங்கா பங்கஜம் தெரிவித்திருப்பது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் பதிவான வாக்குகள் வைக்கப்பட்டுள்ள தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரியிலும், கும்பகோணம் அரசு ஆடவர் கலைக் கல்லூரியிலும், பட்டுக்கோட்டை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியிலும் வாக்கு எண்ணிக்கை மே 4 ஆம் தேதி நடைபெறவுள்ளது. இந்த மையங்களில் காவல் துறையினர், துணை ராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த 3 மையங்களில் பாதுகாப்பு கருதி வெள்ளிக்கிழமை (ஏப்.24) முதல் மே 5 மாலை 6 மணி வரை ட்ரோன்கள் பறக்கத் தடை விதிக்கப்படுகிறது. இதை மீறி ட்ரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறக்கவிடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# வாக்கு சதவீதம் எதுவும் மாறவில்லை; மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைக்கும்!

## தொல். திருமாவளவன் எம்.பி. பேட்டி!

மீனம்பாக்கம், ஏப்.27

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் அவர்கள், சென்னையில் இருந்து விமானம் மூலம் நேற்று காலை பெங்களூருக்கு சென்றார்.



முன்னதாக அவர் விமான நிலையத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :-

தமிழக தேர்தலில் வழக்கமான வாக்குபதிவுதான் நடந்துள்ளது. இதில் வியப்படைவதற்கு ஒன்றும் கிடையாது வாக்காளர் பட்டியல் எஸ்.ஐ.ஆர். சிறப்பு திருத்தம் மூலம், லட்சக் கணக்கான வாக்குகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளன. அவைகள் நீக்கம் செய்யப்படாமல் இருந்து, வாக்குபதிவு நடந்திருந்தால், பழைய மாதிரியே வாக்குபதிவு நடந்திருக்கிறது என்று நாம் பேசி இருப்போம். ஆனால் சிறப்பு எஸ்ஐஆர் திருத்தம் மூலம், வாக்குபதிவு செய்யப்படாமல், எண்ணிக்கையில் மட்டும் இருந்த லட்சக் கணக்கான வாக்குகள் நீக்கம் செய்யப்பட்டிருப்பதால், கூடுதலாக வாக்குபதிவாகி இருப்பது போன்ற தோற்றம் உருவாகி உள்ளது. இது உண்மை இல்லை.

ஒவ்வொரு 5 ஆண்டு தேர்தலுக்கு பின்பும், வாக்காளர்கள் 20 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இணைவார்கள். அது எண்ணிக்கையில் கூடுதலாக சேரும். இந்த தேர்தலில் 20 லட்சம் முதல் 25 லட்சம் வரை புதிய வாக்காளர்கள் சேர்ந்துள்ளனர். அவர்கள் போட்ட வாக்குகள்தான் கூடுதலாகி உள்ளன.

இது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வழக்கமாக நடப்பதுதான் இதில் புதிது எதுவும் இல்லை. இந்த தேர்தலில் மீண்டும் தி.மு.க. தான் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, மாபெரும் வெற்றியை பெறும். இதை களத்தில் மக்களை நேரடியாக சந்தித்த அனுபவத்தில் இருந்து உணர்கிறோம்.

### தாயுள்ளத்தோடு மக்களின் மனதில் இடம்பிடித்த

# முதல்வர் மு.க.ஸ்டாலின் மே 4-ல் தமிழ்நாடு வரலாற்றில் புதிய அத்தியாயம் படைப்பார் - மீண்டும் முதல்வராவது உறுதி!

## நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் அறிக்கை!

சென்னை, ஏப்.27

போராட்டத்தால், நிர்வாகத்திறனால் தாயுள்ளம் கொண்ட மக்களின் மனதில் இடம்பிடித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மே 4-ல் தமிழ்நாடு வரலாற்றில் புதிய அத்தியாயம் படைப்பார் மீண்டும் முதல்வராவார். இது உறுதி! உறுதி! என நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

என் அன்பு தலைவர் திராவிட மாடல் 2.0 ஆட்சியின் நாயகர், காத்திருந்து அதிகாரம் பெற்றவர், வேலையில்லா இழி சொல் மனிதர்கள் இதை தெரிந்து கொள்ள வேண்டும். 1953 முத்தமிழ் அறிஞர் புதல்வனாக 1976-இல் அவசர காலத்தில் துன்பம் அனுபவித்தவர்.

1989-ல் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார், தலைவர் கலைஞரின் நிழலாக 50 ஆண்டு கால அரசியல் பயணம், விசில் அடிக்கும் அரசியல் விவரமில்லா சிறு பையனுக்கு என்ன தெரியும்?

தமிழினத் தலைவர் நம்மை விட்டு சென்ற பின் 2021இல், 159 இடங்களில் வெற்றி பெற்று தமிழகத்தின் 12 வது முதலமைச்சரானார் நமது தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள்.

1996 இல் சிங்கார சென்னை திட்டத்தை துவங்கி சென்னையை நவீனப்படுத்தி மேம்பாலங்கள் மற்றும் பாலங்களை கட்டி சென்னை நகரை மாற்றி 2009 இல் துணை முதலமைச்சரானார் சொன்னதை செய்த தலைவர் என்று நம் கண்களில் நிற்கின்றார்.

2021 இல் முதல்வராக பதவி ஏற்றார். அரசியல் எதிரியாக யாரையும் நினைத்ததில்லை. அனைத்து தரப்பு மனிதர்களையும் மதிப்போடு சந்திப்பார் குடும்பமாக இருந்தாலும், தொண்டனாக இருந்தாலும் அனைவரையும் அன்போடு அணைத்துக்கொண்டு செல்பவர் நம் தளபதி முதல்வர் மு.க.ஸ்டாலின்.

சட்டமன்றத்தில் கூட தனது மாண்புகளோடு எதிர்க்கட்சி உறுப்பினர்களை நடத்தியவிதம் பாராட்டுக்குறியது. தனது மேன்மையான நல் குணத்தை காட்டியவர்.

“கழகத்துக்காக உழைத்தவர்களை கழகம் என்றும் மறந்ததில்லை என்ற அண்ணாவின் வரிகளுக்கு ஏற்ப பல அடிமட்ட தொண்டர்களின் பணியை அடையாளம் கண்டு அவர்களை உயர்த்திய பெருமை தளபதிக்கே சேரும். உலகத்திற்கே முன்மாதிரியாக இன்று புதுமை பெண் திட்டத்தின் மூலம் பெண்களுக்கு நல்ல திட்டங்களை அளித்தார். மருத்துவத்தில் உயிர் காக்கும் வசதிகளை அளித்து பல துறைகளை மேம்படுத்தினார்.

இன்று DELIMITATION. ஐ தைரியமாகவும் வெளிப்படையாகவும் எதிர்த்து தமிழக மக்களின் குரலாக விளங்கினார். அனைத்து திட்டங்களை நேரடியாக சென்று அடைய வேண்டும் என்று உறுதிகொண்டவர். ஐய்யாயிரம் ரூபாய் நேரடியாக பெண்களின் வங்கி கணக்கில் செலுத்தி மகிழ்ச்சியை உண்டாக்கினார்.

போராட்டத்தால், நிற்வாகத்திரனால் தாயுள்ளம் கொண்ட மக்களின் மனதை தொட்ட முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் மே 4-ல் தமிழக வரலாற்றில் புதிய அத்தியாயத்தை படைப்பார் என்பது உறுதி உறுதி உறுதி.

இவ்வாறு திருமதி. ஓவியம் தெரிவித்துள்ளார்.

### டெல்லி கேப்பிடல்ஸ்க்கு எதிரான டி20 போட்டியில்

# 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பஞ்சாப் கிங்ஸ் அபார வெற்றி!

டெல்லி, ஏப்.27-

ஐபிஎல் தொடரில் டெல்லி அணியை 6 விக்கெட்டுகள் வித்தியா சத்தில் வீழ்த்தி பஞ்சாப் அணி வெற்றி பெற்றது. முதலில் பேட்டிங் செய்த டெல்லி அணி 20 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 264 ரன்கள் எடுத்தனர். டெல்லி அணியில் அதிகபட்சமாக கே.எல். ராகுல் 152, நிதிஷ் ராணா 91 ரன்கள் எடுத்தனர். பின்னர் பேட் செய்த பஞ்சாப் அணி 18.5 ஓவரில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 265 ரன்கள் எடுத்தது. ஐ.பி.எல். போட்டிகளில் அதிகபட்ச இலக்கை எட்டி பஞ்சாப் அணி சாதனை வெற்றி பெற்றது.

அதிகபட்ச இலக்கான 265 எட்டி பஞ்சாப் அணி வரலாற்று சாதனை வெற்றியை பதிவு செய்துள்ளது.